**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**CC.No. 64/2023**

PW-3

| | | | |
|---|---|---|---|
| Name | நீலமேகம்(PW3) | | |
| Father's Name | முருகன் | தொழில் | |
| Village | சிவதாபுரம் | | |
| Taluk | சேலம் | Age | **37** |
| District | சேலம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th **day of August 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(A6 Produced, A2 to A5 Absent, Petition filed and allowed)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். கடந்த 09.09.2019 தேதி எனக்கு தெரிந்த மாதேஸ்வரன் என்பவர் எனக்கு கொடுக்க வேண்டிய ஒரு கோடி ரூபாயில் 25 லட்சம் கொடுப்பதாக சொல்லி அவிநாசி தெக்கலூருக்கு வர சொன்னார். நான் மாலை 6:30 மணி அளவில் தெக்கலூருக்கு வந்து காத்திருந்தேன். சிறிது நேரம் கழித்து நான்கு பேர் பொலிரோ வாகனத்தில் அந்த இடத்திற்கு வந்தார்கள். என்னை அடித்து என்னுடைய சியாஸ் காரிலேயே கடத்திக் கொண்டு சென்றார்கள். என்னிடம் இருந்து செயின் ,பர்ஸ், ஏடிஎம் கார்டுகள் ஆகியவற்றை பிடுங்கி கொண்டார்கள். ஒரு மணி நேரம் கழித்து ஒரு இடத்தில் வண்டியை நிறுத்தி அவர்கள் இறங்கி கொண்டார்கள். நான் அது எந்த இடம் என்று விசாரித்த போது கருமத்தம்பட்டி டோல்கேட் என்று தெரிந்து கொண்டேன். பின்பு அவிநாசி அரசு மருத்துவமனை வந்து சிகிச்சைக்கு சேர்ந்தேன். மறுநாள் உறவினர்களை வரச் சொல்லி அவிநாசி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகளை நான் சொல்ல சொல்ல ஒருவர் எழுதினார். அவர் பெயர் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சுமார் ஆறு மாதங்கள் கழித்து நீதிமன்றத்தில் இருந்து பணம் பெற்று சென்றேன். எவ்வளவு என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னை கடத்தி சென்ற நான்கு பேரை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். அந்த நான்கு நபர்களில் ஒருவர் ஆஜர் எதிரி தான்.

(மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)

**2 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். நான் வெள்ளி தொழில் செய்து வருகிறேன். மாதேஷ் என்னை எந்த தேதி அன்று எத்தனை மணிக்கு போன் செய்து அழைத்தார் என்ற விபரத்தை நான் என் புகாரில் சொல்லி உள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எத்தனை மணிக்கு நான் வருகிறேன் என்ற விபரத்தை மாதேஷ் இடம் சொன்னேனா என்றால் ஆறு மணி என்று சொன்னேன். மேற்சொன்ன விபரத்தை என் புகாரில் சொல்லி உள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் வரும் வழியில் மாதேஷுக்கு போன் செய்து நான் வருகிற விபரத்தை சொன்னதைப் பற்றி என் புகாரில் சொல்லி உள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த புகாரை நான் எழுதாத காரணத்தினால் தான் எனக்கு ஞாபகம் இல்லை என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரத்திற்கும் நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கும் சுமார் 22 மணி நேரம் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் மேற்சொன்ன காலதாமதத்திற்கான காரணத்தை நான் என் புகாரில் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. என்னை பொலிரோ காரில் கடத்தினார்கள் என்ற விபரத்தை புகாரில் குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். அந்த பொலிரோ வாகனத்தின் பதிவு எண், நிறம் போன்ற விபரத்தை புகாரிலோ போலீஸ் விசாரணையிலோ சொல்லி உள்ளேனா என்றால் தற்போது எனக்கு மறந்து விட்டது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் மின் கம்பம், மின் விளக்குகள் இருந்ததா என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரியல்ல ஒரு சில்லி கடையும், பஞ்சர் கடையும் இருந்தது. அதைத் தவிர வேறு எந்த கடைகளும் அங்கு இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் Street light இல்லை என்றால் சரிதான். மாதேஷ் குறிப்பிட்டு ஒரு இடத்திற்கு வர சொல்லி என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நானாக தான் தெக்கலூர் பஞ்சர் கடை மற்றும் சில்லி கடை இருக்கும் இடத்திற்கு வந்து நின்றேன் என்றால் சரிதான். நான் தெக்கலூர் சில்லி கடை மற்றும் பஞ்சர் கடை அருகே வந்து நின்று கொண்டு இருக்கிறேன் என்ற விபரத்தை மாதேஷ் இடம் சொன்னேன் என்ற சங்கதியை என் புகாரிலோ போலீஸ் விசாரணையிலோ சொல்லி உள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. என்னுடன் வந்த ஸ்ரீதர் பாபு எனக்கு தொழில் ரீதியாக மூன்று ஆண்டு காலமாக பழக்கம் அவர் என்னுடைய நண்பர். அவரின் தொலைபேசி எண் எனக்கு மனப்பாடமாக தெரியாது. என்னை அடிக்கும் போது ஸ்ரீதர் பாபு வந்து தடுத்தாரா என்றால் அவரையும் அடிப்பதற்காக தனியே கொண்டு சென்று விட்டார்கள். என்னை அடிக்கும் போது ஸ்ரீதர் பாபு தடுப்பதற்காக வந்தபோது அவரையும் அடித்துவிட்டார்கள் என்ற விபரத்தை என் புகாரிலோ போலீஸ் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. கடத்தி சென்ற நபர்களின் அங்க

அடையாளங்களை பற்றி தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. என்னை கடத்தி சென்ற நபர்கள் என்ன ஆடை அணிந்திருந்தார்கள் என்ன வகையாக துணி அணிந்து இருந்தார்கள் போன்ற விபரங்கள் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்சொன்ன விபரத்தை பற்றி நான் என் புகாரிலோ போலீஸ் விசாரணையோ சொல்லி உள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் எந்த திசையை நோக்கி நின்று கொண்டு இருந்தேன் என்றும் ஸ்ரீதர் பாபு எந்த திசையை நோக்கி நின்று கொண்டிருந்தார் என்றும் என்னுடைய வாகனம் எந்த திசையை நோக்கி நின்று கொண்டு இருந்தது போன்ற விபரத்தை என் புகாரிலோ போலீசார் விசாரணையிலோ சொல்லி உள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நீண்ட நாட்கள் ஆகிவிட்டதால் அந்த வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்ற விபரம் எனக்கு ஞாபகம் இல்லை என்றால் சரிதான். என்னுடைய வாகனத்தின் சாவியை யார் வைத்திருந்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. யார் சாவியை பிடிங்கினார்கள் என்ற விபரமும் எனக்கு ஞாபகம் இல்லை. தெக்கலூர் பிரிவு என்பது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரியல்ல சர்வீஸ் ரோட்டில் தனியாக இருந்தது. சம்பவ இடம் இருட்டாக இருந்ததால் அங்கு யார் இருந்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். என்னை கடத்தி சென்ற நபர்கள் எந்த திசையில் இருந்து திசை நோக்கி சென்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. ஸ்ரீதர் பாபு எவ்வளவு தூரம் ஓடினார் எந்த திசையை நோக்கி ஓடினார் என்ற விபரம் எனக்கு தெரியாது. ஸ்ரீதர் பாபு காவல் நிலையத்தில் வந்து புகார் கொடுத்தாரா என்ற விபரத்தை நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. என்னுடைய செயின் மற்றும் மோதிரம் எவ்வளவு எடை அது எந்த மாடல் என்று என் புகாரில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எத்தனை ஏடிஎம் கார்டுகள் அது எந்த வங்கியின் கார்டுகள் என்பதை பற்றி புகாரிலும் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. என்னுடைய பர்சின் நிறம் மற்றும் அதில் எவ்வளவு தொகை வைத்திருந்தேன் போன்ற விபரத்தை என் புகாரில் சொல்லி உள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய செல்போனின் மாடல், ஐ எம் இ ஐ எண், மற்றும் தொலைபேசி எண் ஆகியவற்றை புகாரிலும் போலீசார் விசாரணையிலும் நான் சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.நான் சொன்ன முறையில் சொன்ன தேதியில் யாரும் கடத்தி செல்லவில்லை என்றும் அவ்வாறு கடத்தி சென்று இருந்தால் நான் என் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லி இருப்பேன் என்றும் அவ்வாறு ஒரு சம்பவமே நடைபெறாததால் தான் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னை கடத்தி சென்று கருமத்தம்பட்டி டோல்கேட்டில் விட்டு சென்று எந்த வாகனத்தில் சென்றார்கள் என்று என் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அதே போல் டோல்கேட் பக்கத்தில் டோலில் வேலை செய்யும் நபர்களிடம் எந்த உதவியும் பெற வேண்டும் என்று எனக்கு தோணவில்லை என்றால் ஞாபகம் இல்லை. டோலில் அருகே வந்து காவல்துறையின் அவசர எண் 100 க்கு போன் செய்து காவல்

நிலையத்திற்கு தகவல் சொன்னேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. டோல்கேட் அருகே உள்ள கருமத்தம்பட்டி காவல் நிலையம் சென்று சொன்னேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. உண்மையாகவே நான் கடத்தப்பட்டு பொருட்கள் கொள்ளையடித்து சென்று இருந்தால் நான் உடனடியாக காவல் நிலையத்திற்கு சொல்லி இருப்பேன் என்றும் அவ்வாறு ஒரு சம்பவமே நடைபெறாததால் தான் நான் காவல்துறையினருக்கு சொல்லவில்லை என்றால் சம்பவம் நடந்தது உண்மை காவல்துறையினருக்கு சொன்ன விபரத்தை பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. அதே போல் டோலில் இருந்து நான் அவிநாசி அரசு மருத்துவமனைக்கு தான் முதலில் வந்தேன். அங்கிருந்த மருத்துவர்களிடம் என்னை கடத்தி சென்ற விபரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். அந்த விபரத்தை கேட்டு அவர் உடனடியாக அவிநாசி காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தார் என்றால் சரிதான். அவிநாசி அரசு மருத்துவமனைக்கு அருகில் தான் அவிநாசி காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். உடனடியாக நான் சென்று புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் என் உறவினர்கள் வந்த பின் தான் புகார் கொடுத்தேன். நான் அவிநாசி அரசு மருத்துவமனையில் இருந்து சேலம் சென்று விட்டேனா என்றால் இல்லை கோவையில் உள்ள என் உறவினர்கள் வீட்டிற்கு சென்று விட்டேன். கோவையில் உள்ள என் உறவினர் வீட்டிற்கு சென்று விட்டு வந்து தான் புகார் கொடுக்கிறேன் என்ற விபரத்தை என் புகாரிலோ போலீஸ் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. அந்த உறவினர் யார் என்றும் அவர் எனக்கு என்ன உறவு முறை என்று புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் நான் சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும் வழக்கிற்கும் இந்த எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் அவர் உண்மையாக நடந்திருந்தால் அனைத்து விபரங்களையும் என் புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் நான் சொல்லி இருப்பேன் என்றால் சரியல்ல.

ஸ்ரீதர் பாபுவிடம் நான் என்னை கருமத்தம்பட்டி டோல்கேட்டில் இறக்கி விட்ட உடன் பேசினேன். அவர் என்னுடன் மருத்துவமனைக்கு வந்துவிட்டு தான் அவர் ஊருக்கு சென்று விட்டார். ஸ்ரீதர் பாபு என்னுடன் அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டு தான் சென்றார் என்ற விபரத்தை புகாரிலும் போலீஸ் விசாரணைகளும் சொல்லி உள்ளேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் பொருட்கள் கொள்ளையடித்து சென்றிருந்தால் அதை பொருட்கள் எனக்கு மீண்டும் கிடைத்திருக்கும் என்றும் அவ்வாறு ஒரு சம்பவமே நடக்காததால் தான் எனக்கு கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் தொலைபேசி நகை அனைத்தும் பிடுங்கி சென்று இருந்தார்கள் என்றால் அதற்கான ரசீதுகளை நான் என் புகார் உடன் இணைத்து காவல் நிலையத்திற்கு சமர்ப்பித்திருப்பேன் என்றால்சம்பவம் நடந்தது உண்மை ஆனால் அந்த ரசீதுகளை நான் இணைத்து காவல்துறையினருக்கு கொடுக்கவில்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் எனக்கு எதிரி மேல் இருக்கும் பொறாமையின் காரணமாக தான் இந்த வழக்கு

பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் நான் அரசு வேலை வாங்கி தருகிறேன் என்ற புகாரியின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்ற எண். 505/2019 அவிநாசி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான் ஆனால் அது பொய் வழக்கு.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |